## (iii) ஐக்கிய இராஜ்ஜியத்தின் (United Kingdom) இராணி இரண்டாம் எலிசபெத் அவர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஐக்கிய இராஜ்ஜியத்தின் மாட்சிமை தங்கிய இராணி இரண்டாம் எலிசபெத் அவர்கள் 8–9–2022 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

*ஐக்கிய இராஜ்ஜியத்தை மிக நீண்ட காலம் ஆட்சி செய்து பொன்விழா கண்ட இராணியாக மணிமகுடம் சூடியவர் இராணி இரண்டாம் எலிசபெத் அவர்கள். அனைவரின் அன்பிற்கும் போற்றுதலுக்கும் உரியவராக திகழ்ந்த இராணி எலிசபெத் அம்மையார் அவர்கள் தனது பொது வாழ்க்கையில் கடைப்பிடித்த கண்ணியம் மற்றும் அர்ப்பணிப்புக்காக நீண்ட காலம் நினைவுக் கூரப்படுவார்.*

*அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் இங்கிலாந்து அரச குடும்பத்தினர், இங்கிலாந்து மக்கள் மற்றும் உலகெங்கிலும் உள்ள அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.*

## (iv) மலேசிய இந்திய காங்கிரஸின் முன்னாள் தலைவர் துன் திரு எஸ். சாமிவேலு அவர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மலேசிய இந்திய காங்கிரஸின் முன்னாள் தலைவர் துன் திரு. எஸ். சாமிவேலு அவர்கள் 15–9–2022 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

*ஏழைக் குடும்பத்தில் பிறந்த துன் திரு. எஸ். சாமிவேலு அவர்கள் இளம் வயதிலேயே பொது வாழ்க்கையிலும், அரசியலிலும் தன்னை தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டவர். மலேசிய அமைச்சரவையில் 29 ஆண்டுகள் அமைச்சராகப் பணியாற்றிய பெருமைக்குரியவர்.*

*அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், மலேசியவாழ் இந்தியர்களுக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.*